அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு

# 2022/2023

# தமிழ்

## ஆண்டு 12

| | |
|---|---|
| **நேரம்: 180 மணித்துளிகள்** | **மொத்தப்புள்ளிகள்: 80**<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்) |
| **நாள்: சனிக்கிழமை** | **பக்கங்கள்: 15** |

**பெயர்:**

**தமிழ்ப்பள்ளி:**

## பகுதி 1 - எழுதுதல்

**1. பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

1 2 3 4

1. தொன்னூல் விளக்கம் என்பது
   1. நீதிநூல்
   2. சிற்றிலக்கியம்
   3. இலக்கணநூல்
   4. பொருளியல்நூல்

2. கதிரவனும் திங்களும் என்னும் தொடர்
   1. தொகாநிலை
   2. தொகைநிலை
   3. பண்புத்தொகை
   4. உம்மைத்தொகை

3. குற்றியலுகரத்தின் முன் மெய் புணர்ந்த சொல்
   1. காட்டாறு
   2. அன்பளிப்பு
   3. ஆற்றோரம்
   4. சோற்றுப்பானை

4. மருதநிலத்துக்கு உரிய அகத்திணை ஒழுக்கம்
   1. இரங்கல்
   2. ஊடல்
   3. இருத்தல்
   4. பிரிதல்

5. மூன்று + ஏழு என்பதைப் புணர்த்தினால்
   1. மூவேழு
   2. மூன்றேழு
   3. மூன்றுஏழு
   4. மூந்றேழு

6. அணியிலக்கணத்தை மட்டும் விளக்கும் இலக்கணநூல்
   1. நன்னூல்
   2. தொல்காப்பியம்
   3. வீரசோழியம்
   4. தண்டியலங்காரம்

7. செயப்படுபொருள் குன்றாத வினையடி
   1. சிரி
   2. நட
   3. நடி
   4. ஓடு

1 2 3 4

8. உளவீரத்துள் அடங்குவது
   1. அச்சம்
   2. துணிவு
   3. சீற்றம்
   4. துன்பம்

9. தீந்தமிழ் என்பதன் பிரிப்பு வடிவம்
   1. தீ + தமிழ்
   2. தீமை + தமிழ்
   3. தீம் + தமிழ்
   4. தீந் + தமிழ்

10. தமிழ்மொழி ஆய்வுக்குக் கிடைத்த முதல் ஒப்பிலக்கணநூலை எழுதியவர்
    1. கால்டுவெல்
    2. வீரமாமுனிவர்
    3. யீ. யு. போப்
    4. தேவநேயப்பாவாணர்

11. நாளை விடுமுறை. எழிலி பள்ளிக்குச் செல்லமாட்டாள். இச்சொல்லியங்களை இணைக்கும் இணைப்பிடைச்சொல
    1. ஆனால்
    2. ஏனென்றால்
    3. ஆயினும்
    4. எனவே

12. இல்லம், உள்ளம், இடம் என்னும் பல பொருள் தரும் ஒரு சொல்
    1. கிள்ளை
    2. தத்தை
    3. அகம்
    4. வாரணம்

13. சைக்கிள் என்பது
    1. திசைச்சொல்
    2. இயற்சொல்
    3. வடசொல்
    4. திரிசொல்

14. சமற்கிருதமொழிக்கு இலக்கணம் வகுத்த தமிழறிஞர்
    1. பாணினி
    2. பவணந்தி
    3. மறைமலையடிகள்
    4. யோசப் பெசுக்கி

1 2 3 4

15. பொங்குதமிழ் என்பது
    1. பண்புத்தொகை
    2. உவமைத்தொடர்
    3. வினைத்தொகை
    4. அன்மொழித்தொகை

16. சிறுவர் இல்லம் என்ற சொற்றொடரில் மறைந்துள்ள வேற்றுமையுருபு
    1. ஆல்
    2. இல்
    3. ஐ
    4. அது

17. கொழுநன் என்பதன் சொற்பொருள்
    1. தந்தை
    2. கணவன்
    3. தோழன்
    4. வீரன்

18. தமிழினியோ ஆடினாள். இங்கு ஓகார இடைச்சொல் உணர்த்தும் பொருள்
    1. எதிர்மறை
    2. வினா
    3. பிரிநிலை
    4. தெரிநிலை

19. குறைந்த சொல்லாட்சியுடன் நிறைந்த கருத்தைக் கொண்டிருந்தவை
    1. நாயக்கர்கால இலக்கியங்கள்
    2. பக்தியிலக்கியங்கள்
    3. சங்ககால இலக்கியங்கள்
    4. காப்பியங்கள்

20. வானத்தில் பறவைகள் கூட்டங்கூட்டமாகப் பறக்கின்றன. கூட்டங்கூட்டமாக என்பது
    1. இரட்டைக்கிளவி
    2. அடுக்குத்தொடர்
    3. இணைமொழி
    4. அடுக்கிடுக்குத்தொடர்

21. காவல், விரைவு, புதுமை, மணம் போன்ற பல பொருள் தரும் உரிச்சொல்
    1. சால
    2. உறு
    3. கழி
    4. கடி

**1 2 3 4**

22. வீரத்தாய் போர்க்களத்துக்கு அனுப்பிய மகனுக்குக் கையில் கொடுத்த போர்க்கருவி
    1. வேல்
    2. வாள்
    3. வில்
    4. கத்தி

23. மகிழ்ந்தனள் என்ற பகுசொல்லில் வரும் சாரியை
    1. அள்
    2. த்
    3. அன்
    4. ந்

24. ஏடுகளில் எழுதப்பட்ட தமிழ்மொழி, தாள்களுக்கு மாறிய காலம்
    1. சங்கமருவியகாலம்
    2. பல்லவர்காலம்
    3. சோழர்காலம்
    4. ஐரோப்பியர் காலம்

25. அஃறிணைக்குரிய பால்களுள் அடங்குவது
    1. ஆண்பால்
    2. பெண்பால்
    3. பலவின்பால்
    4. பலர்பால்

(25 X 1 = 25 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. தமிழைச் செம்மைப்படுத்திய இலக்கிய வடிவங்கள் நான்கு எழுதுக.

______________________________

______________________________

2. கவிஞர் பார்த்திபனின் ‘ஒட்டிய வயிறு ஒருமுறை நிமிர்ந்து சுருங்கும்’ என்ற பாடலடி எத்தகைய உணர்வை ஏற்படுத்துகிறது?

______________________________

______________________________

3. நால்வகைப் படைகளும் எவை?

______________________________

______________________________

4. சிந்துவெளி நாகரிக மக்கள் தெற்கு நோக்கி ஏன் இடம்பெயர்ந்தனர்?

______________________________________________

______________________________________________

5. பின்வருவனவற்றுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.

மூன்றாம் வேற்றுமைத்தொகை: ______________________

பொருளாகுபெயர்: ______________________

6. இலக்கண வகையால் சொற்களின் பாகுபாட்டை எழுதுக.

______________________________________________

______________________________________________

7. தரப்பட்டுள்ளவற்றுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.

சினைப்பெயர்: ______________ குணப்பெயர்: ______________

இணைமொழி: ______________ எதிர்மறைப் பெயரெச்சம்: ______________

(5 x 2 = 10 புள்ளிகள்)

**3. தரப்பட்டுள்ளனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

1. தீந்தமிழே! என் தாய்மொழியே!
2. 

(5 புள்ளிகள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

**4. தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து, அதனை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக.**

உக்ரைன் இரசியப் போருக்குப் பின் எண்ணெய், எரிவளி போன்றவற்றின் விலை உலகெங்கும் பெருமளவில் அதிகரித்துள்ளது. அதுமட்டுமல்லாமல், மின்சாரக் கட்டணமும் அதிகரித்துள்ளது. இந்நிலையானது உலகளவில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. ஐரோப்பாவைப் பொறுத்தவரை எரிவளி ஏற்றுமதியில் இரசியா ஒரு வல்லரசாக விளங்குகிறது எனலாம். கோதுமை மா ஏற்றுமதியில் இரசியா, உக்ரைன், கசுகசுத்தான் ஆகிய நாடுகள் முதன்மை இடத்தைப் பெறுகின்றன. இம்மூன்று நாடுகளும் கருங்கடல் ஊடாக உலகின் மொத்த கோதுமைப் பயன்பாட்டில் மூன்றில் ஒரு பங்கினை ஏற்றுமதி செய்கின்றன. சோளம் மற்றும் சூரியகாந்தி எண்ணெய் விளைவாக்கத்தில் முன்னணியில் நிற்கும் நாடு உக்ரைன் ஆகும். உலக நாடுகளுக்கான 20% சோளமும் 80% சூரியகாந்தி எண்ணெயும் உக்ரைனிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன. எகிப்து, துருக்கி, இந்தோனேசியா போன்ற மக்கள்தொகை அதிகமுள்ள நாடுகள் இப்பொருள்களில் பெரிதும் தங்கியுள்ளன. உலக நாடுகள் பலவற்றின் பொருண்மிய மேம்பாட்டுக்கு இரசியாவின் மூலப்பொருள்கள் அகத்தியமானவை. அத்துடன், உணவுத்தட்டுப்பாடு ஏற்படும் வகையில் எரிவளி மற்றும் மூலப்பொருள்களின் தட்டுப்பாடும் உலகநாடுகளின் தொழில் ஆலைகளது உருவாக்கங்களைப் பாதிக்கக் கூடியனவாக உள்ளன. இத்தகைய பாதிப்புகளின் விளைவாக இயற்கை எரிவளி உருவாக்கத்திற்கான திட்டமிடல்களை ஐரோப்பிய ஒன்றியம் வகுக்கத் தொடங்கியுள்ளது. இயற்கை வளங்களான கடலலை, காற்றலை, கதிரொளி போன்றவற்றிலிருந்து புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உருவாக்கத்திற்கான தொழில்நுட்பக் கட்டுமானங்கள் மூலம் அதிகளவு மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ளும் வகையிலான செயற்றிட்டங்களில் ஐரோப்பிய நாடுகள் முனைப்போடு இறங்கியுள்ளன.

(5 புள்ளிகள்)

**5. தரப்பட்டுள்ள பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

**தமிழ்:**

தமிழராகிய நாம் உலகெங்கும் பரந்து வாழ்கின்றோம். தமிழ் இளையோர் தாங்கள் வாழும் நாடுகளில் பல்வேறுபட்ட துறைகளில் சிறந்து விளங்குகின்றனர். வாழிடமொழியுடன் தாய்மொழியைக் கற்றுக்கொள்வதிலும் அக்கறையோடு உள்ளனர். தாய்மொழியாம் தமிழைக் கற்பதனூடாகத் தங்கள் அடையாளத்தை உணர்ந்து கொள்கின்றனர். தமிழர் வாழும் நாடெங்கும் தமிழ்ப்பள்ளிகள் சிறப்பாக இயங்கி வருகின்றன. இப்பள்ளிகள் தாய்மொழிப்பற்றையும் தாய்நாட்டுப்பற்றையும் மாணவர்களுக்கு ஊட்டி வளர்ப்பதை இலக்காகக் கொண்டுள்ளன. மாணவர்கள் தமிழ்மொழியுடன் தமிழர் வரலாறு, தாயக வரலாறு, கலை பண்பாட்டையும் கற்றுக் கொள்கின்றனர். தாய்மொழியில் சிறந்து விளங்கும் ஒருவர், ஏனைய மொழிகளையும் இலகுவாகக் கற்றுக் கொள்வார் என்பது உளவியல் சார்ந்த உண்மையாகும். இதற்கு எடுத்துக்காட்டாக எமது இளையோர் விளங்குகின்றார்கள் என்பதில் ஐயமில்லை.

(5 புள்ளிகள்)

**வாழிடமொழி:**

**6. தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. தமிழிலக்கிய வரலாற்றில் ஐரோப்பியர் காலம்
2. தமிழரது மொழியிலும் கல்வியிலும் ஆரியரின் ஊடுருவல்
3. முள்ளிவாய்க்காலுக்குப் பின்னரான தாயகத்தின் நிலை

**உள்ளடக்கக் குறிப்புகள்:**

- முள்ளிவாய்க்கால் இறுதிப்போர்
- காணாமல் ஆக்கப்பட்டோர்
- இலங்கை அரசின் திட்டமிட்ட தமிழின அழிப்புச் செயற்பாடுகள்

(15 புள்ளிகள்)

## பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுமையானவிடை எழுதுக.**

இலக்கியம் என்பது ஒரு குமுகத்தின் பண்பாடு, கலை, அரசியல், பொருளாதார விழுமியங்களைப் பிரதிபலிக்கும் காலத்தின் கண்ணாடி ஆகும். இந்தவகையில் எம் போராட்டகால இலக்கியங்கள், எமது மக்கள் விடுதலை மீது கொண்டிருந்த வேட்கையை எடுத்துரைப்பனவாக உள்ளன. போராட்டத்துக்கு உள்ளேயும் வெளியேயும் பல கவிஞர்கள் தமது கவிதைகள் மூலம் போராட்டத்துக்கு வலுச்சேர்த்தார்கள். ஆண்கவிஞர்கள் மட்டுமல்லாது பெண்கவிஞர்கள் பலரும் துணிவோடு தமது கருத்துகளுக்கு எழுத்து வடிவம் கொடுத்தார்கள். போராட்டத்துக்கு உள்ளே இருந்து தமது ஆக்கங்களை வெளியிட்ட பெண்கவிஞர்களுள் மேயர் பாரதி, மலைமகள், கப்டன் கஸ்தூரி, கப்டன் வானதி போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுள் பத்மசோதி சண்முகநாதப்பிள்ளை என்ற இயற்பெயரைக் கொண்ட கப்டன் வானதி யாழ்மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். உறுதியுடனும் மனத்துணிவோடும் களத்தில் போராடியவர். 'துப்பாக்கி, சன்னத்தை மட்டுமே துப்பும் என் பேனாவோ சகலத்தையும் கக்கும்' என்ற இவரது கவிதை வரிகள் மிகவும் ஆழமான பொருள் பொதிந்தவை. 'சகலத்தையும்' என்ற ஒற்றைச் சொல்லினூடாக அவர் வெளிப்படுத்தியவை ஏராளம். ஆணாதிக்கப் பிடியிலிருந்து பெண்கள் விடுபட்டு களத்தில் போராட வேண்டுமென்றும் தன் படைப்புகள் மூலம் குரல் கொடுத்தவர். விடுதலைக்காகத் தன்னுயிரை ஈகம் செய்யும்வரை இவரது எழுதுகோல் எழுதிக்கொண்டே இருந்தது. கப்டன் வானதி அவர்கள் களத்தில் வீரச்சாவைத் தழுவிக்கொள்வதற்கு முன் இறுதியாக எழுதிய கவிதைத் தலைப்பு 'எழுதாத கவிதைகள்'. 1991இல் தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளியீட்டுப் பிரிவால் இவரது கவிதைகள் தொகுக்கப்பட்டு 'வானதியின் கவிதைகள்' என்ற பெயரில் வெளியிடப்பட்டது. கப்டன் வானதியின் பெயரில் இயங்கும் கப்டன் வானதி வெளியீட்டகம், படைப்பார்வம் மிக்க பெண்களுடைய படைப்புகளின் வெளியீடு, இலக்கியப் போட்டிகள், பயிலரங்குகள், மதிப்பளிப்பு போன்ற பணிகளை ஆற்றியது.

1. கப்டன் வானதியின் இயற்பெயர் என்ன? (1 புள்ளி)

______________________________

2. இவர் இறுதியாக எழுதிய கவிதையின் தலைப்பு எது? (1 புள்ளி)

______________________________

______________________________

3. போராட்டகாலப் பெண்படைப்பாளர்கள் இருவரின் பெயர்களை எழுதுக. (2 புள்ளிகள்)

______________________________

______________________________

4. போராட்டகால இலக்கியங்கள் எதை எடுத்துரைக்கின்றன? (2 புள்ளிகள்)

______________________________

______________________________

5. கப்டன் வானதி வெளியீட்டகம் ஆற்றிய பணிகளுள் இரண்டினை எழுதுக.

(2 புள்ளிகள்)

______________________________

______________________________

6. இங்கு கூறப்பட்ட கப்டன் வானதியின் கவிதை வரிகளை எழுதுக. (1 புள்ளி)

______________________________

(9 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள உரைப்பகுதிகளை வாசித்து, அவற்றுக்கு மிகப்பொருத்தமான தலைப்பைத் தெரிவுசெய்து எழுதுக.**

**(ஒரு தலைப்பை ஒருமுறை மட்டுமே பயன்படுத்தலாம்)**

**தலைப்புகள்:**

- கலைத்திறன் போட்டி
- தாயக நலன் காப்போம்!
- இசைவிழா
- இன்னியக் கலைஞர் தேவை

1. ______________________________

கல்வி ஒன்றே அழியாத செல்வம். கல்வியே நாட்டின் முதல் அரண். தாயகச் சிறார்களின் கல்வி மேம்பாட்டிற்காக நடத்தப்படும் கலைமாலையைக் காண வாரீர்! இந்நிகழ்வில் விடுதலைப் பாடல்கள், விடுதலை நடனங்கள், தாளலயம், கூத்து போன்றன இடம்பெறவிருக்கின்றன. உறவுகளே! கலந்துகொண்டு எம் சிறார்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவுங்கள். உறவுக்குக் கை கொடுப்போம். கலைமாலை காண வாருங்கள்!

2. ______________________________

புலம்பெயர் இளையோர்களே! உங்கள் கலைத்திறனை வெளிப்படுத்த ஓர் அரிய வாய்ப்பு. இலைமறை காய்களாக வாழும் உங்கள் திறமைகளை வெளிக்கொணர, எம்மால் நடாத்தப்படும் கலைத்திறன்போட்டி. வயதெல்லை இல்லை. இப்போட்டியில் வாய்ப்பாட்டு, தாயகப்பாடல், இன்னியங்களின் இசை, ஊரகக்கலைகள், எழுச்சி நடனங்கள் போன்றன இடம்பெறுகின்றன. இளையோரே! கலந்து கொண்டு மதிப்பளிப்பையும் பரிசில்களையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

3. ______________________________

எமது கலை பண்பாட்டுக் கழகத்தின் மாபெரும் இசைத்திருவிழா. காலத்தால் அழியாத தாயகப்பாடல்களைப் பாடிய எம் தாயகக் கலைஞர்கள் பலர் கலந்து சிறப்பிக்கிறார்கள். அவர்களுடன் புலம்பெயர்தேசக் கலைஞர்களும் இணைந்து கொள்கிறார்கள். இவ்விழாவைத் திறம்பட நடாத்துவதற்குப் பல இன்னியக் கலைஞர்கள் தேவைப்படுகிறார்கள். திறமையுள்ளோர் விண்ணப்பிக்கவும். முதலில் விண்ணப்பிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இன்றே விண்ணப்பியுங்கள்! எம் விழாவைச் சிறப்பாக்குங்கள்!

(3 X 2 = 6 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| **எழுதுதல்** | | | | |
| 1 | 25 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 05 | | | |
| 4 | 05 | | | |
| 5 | 05 | | | |
| 6 | 15 | | | |
| **வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்** | | | | |
| 1 | 09 | | | |
| 2 | 06 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |